★ பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி எம். பிக்கள் பேச்சு

## மாகாணசபைகள் முறை நீக்கப்படல் வேண்டும்

தற்போதுள்ள மாகாணசபைகள் முறையின் கீழ் அதிகாரம் பன்முகப்படுத்தப்படவில்லை என்று சுதந்திரக்கட்சி எம். பி. ரிச்சர்ட் பத்திரான நேற்று பாராளுமன்றத்தில் கூறினார். நாட்டின் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்படவேண்டும் என்றும் மாகாண சபைகள் முறைகள் ஒழிக்கப்படவேண்டும் என்றும் அவர் கூறினார். மாகாணசபையைக் கலைத்து அதற்கு கொடுக்கப்படும் அதிகாரங்களைப் பிரதேச சபைகளுக்கு வழங்கப்படவேண்டும். கிராமமட்டத்தில் இருந்த அதிகாரங்கள் மாகாணசபைகள் அதிகாரங்களின் கீழ் ஓரிடத்தில் குவிக்கப்படுகிறது என்று மக்கள் ஐக்கிய முன்னணி எம் பி. தினேஷ் குணவர்த்தன கூறினார். மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் போதாது என்று கூட்டணி எம்.பி. ஒருவர் தெரிவித்தார். முஸ்லிம் காங்கிரஸ் எம். பி. அஷ்ரப் பேசுகையில் மாகாணங்களின் எண்ணிக்கையை ஐந்தாகக் குறைக்கவேண்டும். —4 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 3-50

# முரசொலி

முரசு 04 ஒலி 274 புதன் 14-11-1990 (ஐப்பசி 28) ற. ஆகிர் 25

# ஆயுதப்படை கொலைகளுக்கு அரசே பதில் சொல்ல வேண்டும்

## அரசியல் யாப்பிற்குத் திருத்தம் வருகிறது
## சட்ட மா அதிபர் சுனில் டீ சில்வா தகவல்

**ஆயுதப் படையினர் தன்னிச்சையாகச் செய்யும் கொலைகளுக்கும் அரசு இனி பதில் சொல்ல வேண்டி இருக்கும். அதற்கேற்ப அடிப்படை மனித உரிமைகளுங்குத் திருத்தம் கொண்டுவரப்பட்டு, அது அரசியல் சட்டத்திலும் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளது.**

சட்ட மா அதிபர் சுனில் டீ சில்வா கொழும்பு பத்திரிகையொன்றுக்கு அளித்த பேட்டியில் இத்தகவலைத் தெரிவித்தார்.

அரசியல் யாப்பின் 13 (4) ஆம் பிரிவு இது தொடர்பாக திருத்தப்பட்டு எவரது உயிரும் தன்னிச்சையாகப் பறிக்கப்படமாட்டாது என்ற உத்தரவாதமும் அளிக்கப்படலாம் எனத் தெரிகிறது.

—04 ஆம் பக்கம் பார்க்க

### வாழப்பாடி ராமமூர்த்தி சொல்கிறார்
## புலிகளைக் 'கண்டும் காணாது' நடக்கிறது தமிழக அரசு

தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவும், செல்வாக்கும் இருப்பதாக இந்திரா காங்கிரஸ் மீண்டும் கூறியுள்ளது.

இது குறித்துநேற்றுக்கருத்து வெளியிட்ட தமிழ் நாடு இந் —04 ஆம் பக்கம் பார்க்க

### காரைநகரில் சம்பவம்
## இளநீர் பறிக்கச் சென்றவர் கடற்படையால் சுட்டுக்கொலை

காரைநகர் கடற்படை முகாமை அண்மித்த பகுதியில் இளநீர் பறிக்கச் சென்ற ஒருவர் அங்கு மறைந்திருந்த கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். இச் சம்பவம் நேற்றுமுன்தினம் நிகழ்ந்துள்ளது.

வேரப்பிட்டியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சின்னத்தம்பி பாபுஜி (24) என்பவருக்கே இக்கதி நேர்ந்தது. (ப 31)

## மன்னாரில் ஊரடங்கு நீக்கம்

மன்னார் மாவட்டத்தில் அமுல் செய்யப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் நேற்று நண்பகலுடன் நீக்கப்பட்டுள் —04 ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பில் பாதுகாப்பு உஷார்!

ஜே. வி. பி. இயக்கத் தலைவர் ரோகண விஜேவீர கொல்லப்பட்ட ஓராண்டு நிறைவையொட்டி நேற்றுக் கொழும்பிலும் அதனைச்சுற்றியுள்ளபகுதிகளிலும் பாதுகாப்பு உஷார் படுத்தப்பட்டிருந்தது.

### ஊறணி முகாமில் இருந்து
## சிவில் உடையில் வந்த சிப்பாய்கள் மீது தாக்குதல்

கடந்த ஞாயிறன்று காலை எட்டு மணியளவில் ஊறணி ராணுவ முகாமில் இருந்து சிவில் உடையில் வந்த இரு ராணுவச் சிப்பாய்கள் மீது விடுதலைப்புலிகள் முகாமில் இருந்து 200 யார் தூரத்தில் வைத்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் சிப்பாய் ஒருவர் ஸ்தலத்திலேயே —04 ஆம் பக்கம் பார்க்க

## மணலாறில் தாக்குதல் 'லான்ட்குருஸர்' சேதம்

மணலாறு மாவட்டத்தில் (வெலிஓயா) டொலர் பாமிற்கும் இடையில் வாகனம் ஒன்றில் சென்று கொண்டிருந்த ராணுவத்தினர் மீது புலிகள் தாக்குதலை நடாத்தினர்.

இதில் நான்கு சிப்பாய்கள் —04 ஆம் பக்கம் பார்க்க

## வயாவிளான் பகுதிகளில் பல வீடுகள் தகர்ப்பு

வயாவிளான் வடமூலை, சென்ஜேம்ஸ, தோலகட்டிப் பகுதிகளிலுள்ள பல. வீடுகள் எரிக்கப்பட்டும், உடைக்கப்பட்டும், இடிக்கப்பட்டும் காணப்படுவதாக அங்கு சென்று வந்தவர்கள் தெரிவித்தனர்,

கடந்த தீபாவளித் தினத்தன்று இராணுவம் வயாவிளான் நோக்கிவந்த வழிக —04 ஆம் பக்கம் பார்க்க

## வில்கம் விகாரை முகாம் மீது புலிகள் அருள் 89 தாக்குதல்

கடந்த சனியன்று திருமலை மாவட்டம் வில்கம் விகாரை முகாமில் இருந்து கிண்ணியாவிற்கு சென்ற ராணுவத்தினர் மீது விடுதலைப் புலிசள் சினைப்பர் தாக்குதலை மேற்கொண்டனர். இத் தாக்குதலில் இரு சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

இதைத்தொடர்ந்து வில்கம் விகாரை மீது புலிகள் அருள் 89 ஷெல் தாக்குதலையும் மேற்கொண்டனர்.

### கொழும்பிலிருந்து அரச அதிபர் நடவடிக்கை
## வடபகுதிக்கு சில தினங்களில் மின்சாரம் கிடைக்கவுள்ளது

யாழ் மாவட்டத்திற்கான மின்சாரம் இன்னும் ஒரு வாரத்தில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ் அரச அதிபர் திரு அன்ரன் அல்பிறட் கொழும்பில் இலங்கைமின்சாரசபை உயரதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது இத்தகவல்தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாங்குளத்தில் ஏற்பட்டுள்ள யாழ் மாவட்டத்திற்கான மின்சாரத் தடையினை சீர்செய்வதற்கு அனுராதபுரத்திலிருந்து மின்சார ஊழியர்கள் அனுப்பிவைக்கப்படவிருப்பதாகவும் அரச அதிபர் தெரிவித்தார். (66)

## லேகியம் கொண்டு வந்தவர் படையினர் முன்பு உண்டார்!

வவுனியாவில் சோதனையிடும் படையினரிடம் லேகியம் கொண்டுவந்த ஒருவர் அகப்பட்டுக்கொண்டார். லேகியத்தை அவர்கள் கொண்டுவந்தவரை உண்ணும்படி கூறவே, அவரும் அடிவாங்காது உண்டு மயங்கி வீழ்ந்தார். இவருடன் வந்தவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

இதேசமயம் பூசினிக்காயினுள் மறைத்து பற்றறி கொண்டுவந்த ஒருவரும்படையினரிடம்அகப்பட்டார்.(ப11)

## ஜே.வி.பி. யினர் சுட்டதில் பௌத்த பிக்கு காயமடைந்தார்

பெலியத்த பொலிஸ் பகுதியில் உள்ள பட்டியாவல ராஜ மகாவிகாரையில் இருந்த பிக்கு ஒருவரை ஜே. வி. பி சந்தேக நபர்கள் துப்பாக்கியால் சுட்டு காயப்படுத்தியதால் அவர் தங்காலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பகுதியின் சமாதானக் குழுவின் தலைவராக —04ஆம் பக்கம் பார்க்க

## நிவாரணப் பொருட்கள் விற்பனை! சுவரொட்டி மூலம் எச்சரிக்கை

அண்மைய பிரச்சினை காரணமாக வீடுகளை இழந்தோருக்கு யாழ் ஆசனக் கோவிலால் வழங்கப்பட்ட நிவாரணப் பொருட்கள், சம்பந்தப்பட்டவர்களால் விற்கப்படுவதாகக் குருநகர்ப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மனித முன்னேற்ற நிலையத்தினரால் வீடுகளை இழந்தோருக்கு 600 கிடுகுகள அவர்களுடையவீடுகளை திருத்துவதற்கு வழங்கப்பட்டது.

இதனால் நிவாரணப் பொருட்கள் விற்பனை செய்தும், பொருட்களை வாங்குவதும் சட்டப்படி குற்றமாகும் என சிற்றூரவை சுவரொட்டி மூலம் எச்சரிக்கை செய்துள்ளது. (ப17)

225 தொழிலாளர்கள் வேலையிழக்கும் அவலம்:

# சீநோர் தொழிற்சாலைகளை மூட கொழும்பிலிருந்து உத்தரவு

குருநகரிலும், காரைநகரிலும் இயங்கிவரும் சீநோர் தொழிற்சாலைகளை மூடிவிட கொழும்பிலிருந்து உத்தரவிடப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

இந்த இரு தொழிற்சாலைகளிலும் உத்தியோகத்தர்களாக முப்பத்தைந்துபேரும், இயந்திர இயக்குநர்களாக நூற்றி அறுபத்தைந்துபேரும், பயிலுநர்களாகப் பதினைந்து பேரும், சமயாசமய ஊழியர்களாகப்பத்துப்பேரும் ஆக மொத்தம் இருநூற்றி இருபத்தைந்து பேர் தற்போது கடமை புரிந்து வருகின்றனர்.

இவர்களில் அதிகமானோர் கணவன்மாரை இழந்த விதவைகளும், வலது குறைந்தோருமே என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கொழும்பில் இருந்து வந்த உத்தரவில் சமயா சமய ஊழியர்களை வேலை நீக்கம் செய்யுமாறும், மற்றைய தொழிலாளர்களுக்கு சம்பளத்தை இடை நிறுத்துமாறும் பணிக்கப்பட்டுள்ளதாம்.

தொழிற்சாலைக்கு சரியான பாதுகாப்பு இல்லை எனக்கூறியே அதனை மூடுமாறு கொழும்பிலிருந்து உத்தரவிடப்பட்டுள்ளதாம்.

நோர்வே, சுவீடன் நாடுகள் இணைந்த நல்லொழுக்க வாலிபர் சங்கத்தினால் 1965-ம் ஆண்டு உருவாக்கப்பட்ட நோர்வே ஸ்தாபனம் 1975-ம் ஆண்டு குருநகரில் வலைபின்னும் தொழிற்சாலையை ஆரம்பித்திருந்தது. அதன் பின்னர் 1979-ம் ஆண்டு கொழும்பில் ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆரம்பகாலம் முதல் காரைநகரில் இயங்கி வந்த தலைமைக் காரியாலயம் கொழும்பிற்கு மாற்றப்பட்டது.

இவ்வாண்டு குருநகர் தொழிற்சாலை பல தடவைகள் படையினரின் தாக்குதலுக்கு உள்ளாகி சேதமடைந்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (16)

கைதடி பிரசவ விடுதி திறப்புவிழா இன்று

## சித்த மருத்துவத்துறை சிறப்புறஇயங்கஒத்துழைப்புதேவை

''பல்கலைக்கழகத்தின் ஒரு துறையாக சித்த மருத்துவத்துறை விளங்குவதால் அதன் பணி மேலும் விரிவாகஅமைவதுடன் மக்களின் சுகாதாரத் தேவையை ஒட்டுமொத்தமாகத் தீர்ப்பதற்கான திட்டங்களையும் துறை அபிவிருத்திக்கான திட்டங்களையும் செயற்படுத்தவேண்டிய தார்மிகப் பொறுப்பு எமக்கு உள்ளது.''

மேற்கண்டவாறு இன்று நடைபெறவுள்ள கைதடி ஆயுர்வேத வைத்திய சாலையின் மகப்பேற்று நிலையத் திறப்பு விழாவினையொட்டி யாழ், பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறைத் தலைவரும், கைதடி போதனா வைத்தியசாலை மருத்துவ ஆலோசகருமான டாக்டர் எஸ். பவானி விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

''இவற்றை நாம் நடைமுறைப்படுத்துவதற்கு வைத்தியர்களின் ஆலோசனைகள், ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகின்றது'' எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (16)

## மண்டைதீவு வைத்தியசாலை செயற்பாடு

ஸ்ரீலங்கா ராணுவ நடவடிக்கையால் பாதிப்புற்றிருந்த மண்டைதீவு அரசினர் கிராமிய வைத்தியசாலை மீண்டும் இயங்கிவருகின்றது. (19)

ஷெல்லுமுண்டு, பீப்பாயுமுண்டு ஆனால் ...

## நோயாளிகளை மகிழ வைத்த 5 வயதுச்சிறுவனின் புரட்சிக்கானம்

யாழ் போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் தமிழீழ விடுதலைக் கீதங்கள் முழங்கின.

''ஷெல்லுமுண்டு, பீப்பாயு
முண்டு
பொங்கி வரும் ஹெலியு
முண்டு
யுத்தம் மட்டும் இன்னும்
இங்கு தீரவில்லை''

என்ற இந்த விடுதலைக் கீதத்தைச் சாவகச்சேரியைச் சேர்ந்த ஐந்து வயது நிரம்பிய சி. வர்ணராஜன் என்ற சிறுவனே தனது இனிமையான குரலில் வைத்தியசாலையில் பாடினான்.

சில தினங்களுக்கு முன் விமானத் தாக்குதலினால் அவயவங்களை இழந்த நோயாளிகளும், மற்றும் வைத்தியசாலை ஊழியர்களும் குழுமி நின்று அச்சிறுவனின் பாடலில் மெய்மறந்திருந்தனர்.

''இச்சிறுவனின் பாட்டைக் கேட்டதால் எனக்கு கால் இல்லாததே தெரியவில்லை'' என்று நோயாளி ஒருவர் தெரிவித்தார்.

சாவகச்சேரியில் சில தினங்களுக்கு முன் பொம்மர்த் தாக்குதலில் இச்சிறுவனின் அண்ணன் கால் ஒன்றை இழந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (70)

அசையாமணி அடித்து சங்குநாதம் எழுப்பி

## அர்த்த சாமப்பூசை செய்கிறார்கள் நீலவர்ணக் கோலவுடையினர்

காரைநகர் கடற்படையினருக்கு இப்போது திடீர் பக்தி ஏற்பட்டுள்ளதாம்.

முகாமிற்கு பின்புறம் அமைந்துள்ள பலகாடு இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் தற்போது ஆறுகாலப் பூசைகளும் ஒழுங்காக நடைபெறுகின்றதாம்.

இந்த ஆலயப் பூசகர், பக்தர்கள் எல்லாம் இந்த முகாமைச் சேர்ந்த நீலக் கோலவுடையினர் தான்.

அசையாமணி அடித்தும் சங்கு நாத ஒலி எழுப்பியும் இந்துசமய முறை வழுவாமல் இவ்வாலயத்தில் பூசை நடாத்தும் படையினர் துறைமுகப் பிள்ளையார் ஆலயத்திலும் அர்த்த சாமப் பூசையை நடாத்தவும் தயங்குவதில்லையாம்.

இத்திடீர் பக்திக்கு அண்மையில் கோல் உடையினருக்கு ஏற்பட்ட எதிர்பாரா இழப்புக்களே காரணமாம். (ப-31)

க. பொ. த. (சா. த.)

## புதிய பாடத்திட்டப் பரீட்சைக்கு 'மொழித்திறன்' கட்டாய பாடம்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் புதிய பாடத்திட்டத்திற்கு இம்முறை தோற்றுவோர் வழமையான பாடப் பரீட்சைகளுடன் மொழித் திறன் பரீட்சைக்கும் தோற்ற வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

முதலாம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரையிலான பத்து மொழித் திறன் வினாத் தாள்கள் இதன் பொருட்டுத் தயாரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் விரும்பிய ஏதாவது இரு வினாத் தாள்களுக்கு புதிய பாடத் திட்டப் பரீட்சார்த்திகள் விடையெழுதுதல் வேண்டும்.

தமிழ் மாணவர்கள் ஆங்கிலம், சிங்களம் ஆகிய பாடங்களுக்கும், சிங்கள மாணவர்கள் ஆங்கிலம், தமிழ் ஆகிய பாடங்களுக்கும் உரிய வினாத் தாள்களுக்கு விடையெழுதுதல் வேண்டும்.

## வேலணையில் தொற்றுநோய்

வேலணைப் பகுதியில் தற்பொழுது செங்கமாரி, நெருப்புக்காய்ச்சல் போன்றதொடர் காய்ச்சல் நோய்கள் அதிதீவிரமாகப் பரவி வருகின்றன.

இவ்வாறான நோய்களுக்குட்பட்டவர்கள் வேலணை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவருகின்றனர். (19)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்
சுந்தரம்பிள்ளை
திருச்செந்தூர்நாதன் (சந்திரன்)

அன்னையின்மடியில்: 22-04-1964
இறைவனடியில்: 14-11-1988

திதி: 23-10-1990

ஆண்டு இரண்டு ஓடிமறைந்தாலும்
நின் திருமுகம் எம் கண்ணில் இருந்து மறையாது
திக்கித் திணறுகிறோம்.

உன்பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, அண்ணன்,
தம்பிமார், அக்காமார், தங்கைமார்,
அத்தான்மார், அண்ணி.

காரைக்கால்,
இணுவில் கிழக்கு,
இணுவில்.

11066


சிறு விளம்பரம்

சேவை

தரமான போட்டோஸ்ரற், றோணியோ வேலைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள். ''ஸ்கைலைன்ஸ்'' 281B, மணிக்கூட்டுக் கோபுர வீதி, யாழ்ப்பாணம். ''Sky-lines' 281B, Clock Tower Road, Jaffna. (ஏஜென்சி தபாற் கந்தோர் அருகாமை). 11031



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

மருத்துவ பீடம்

பரீட்சைகள் ஆரம்பமாகும் திகதிகள்

கீழ்க்காணும் பரீட்சைகள் கீழ்க்குறிப்பிட்ட திகதிகளில் நடைபெற உள்ளன:

மருத்துவபீட மூன்றாம் ஆண்டுப் பரீட்சை (பகுதி-II) - 20.12.1990.
மருத்துவபீட இரண்டாம் ஆண்டு மீள் பரீட்சை - 27.12.1990.
மருத்துவபீட மூன்றாம் ஆண்டு மீள் பரீட்சை (பகுதி I, பகுதி II) - 08.04.1991.

பதிவாளர்.

11065


## 1-வது பிறந்ததின வாழ்த்து

★ செல்வன் பா.யெநேஷன் ★

வட்டக்கச்சி ஆறுமுகம் றோட்டைச் சேர்ந்த பாலசிங்கம் தவநிதி தம்பதிகளின் புத்திரன் பா.யெநேஷன் தனது பிறந்ததினத்தை இன்று (14.11.1990) வட்டக்கச்சியில் சிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவரை வட்டக்கச்சியைச் சேர்ந்த பேரன் பேத்தி ஆறுமுகம் வள்ளியம்மை தம்பதிகள், வேலணை மேற்கைச்சேர்ந்த சிவஞானம் லெட்சுமி தம்பதிகள், சித்தி, வட்டக்கச்சியைச் சேர்ந்த மாமா, மாமி, சித்தி, சித்தப்பா, மச்சான், மச்சாள், தம்பனையைச் சேர்ந்த பெரியப்பா, பெரியம்மா, சகோதரர்கள், கிளிநொச்சி பெரியப்பா, பெரியம்மா. முரசுமோட்டையைச் சேர்ந்த சித்தப்பா, சித்தி, சகோதரர்கள், இந்தியாவைச்சேர்ந்த சின்னப்பேரன், சுப்பிரமணியம் குடும்பத்தினர், லண்டன் மாமா, தியாகராம், வேலணை மேற்கைச் சேர்ந்த நா. நாகரெத்தினம் குடும்பத்தினர், மாங்குளம் மூர்த்தி குடும்பத்தினர் ஆகியோர்கள் சகல கலைகளும் பெற்று பல்லாண்டு காலம் சிறப்புற வாழவேண்டுமென வாழ்த்துகின்றனர்.

11060

# சிறிய செய்திகள்

## தொழில் நுட்பக் கல்லூரி விரிவுரைகள்

யாழ் தொழில் நுட்பக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய எதிர்வரும் 19-ம் திகதி திங்கள் முதல் முழுநேர வகுப்புக்களும் 24-ம் திகதி முதல் பகுதிநேர வகுப்புக்களும் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பகுதிநேர வகுப்பு மாணவாகள் வரும் 19-ம் 20-ம் திகதிகளில் யாழ் தொழில் நுட்பக் கல்லூரிக்கு வந்து புதிய நேர அட்டவணையைப் பார்த்துச்செல்லும்படி கேட்கப்பட்டுள்ளனர். (ப-7)

## பிலவத்தையில் முதலுதவி வைபவம்

வட்டுக்கோட்டை பிலவத்தை சனசமூக நிலைய ஆதரவில் சென்ஜோன்ஸ் முதலுதவிப் படையினரால் பயிற்றுவிக்கப்பட்ட மாணவர்களுக்கு அண்மையில் மேற்படி சனசமூக நிலையத்தில் நடைபெற்ற வைபவத்தில் வைத்து சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

நிலையத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் சென் ஜோன்ஸ் முதலுதவிப் படை மாகாண ஆணையாளர் டாக்டர் இ. சுகந்தன் சான்றிதழ்களை வழங்கினார்.

## தெல்லிப்பழை மாணவர் கவனத்துக்கு...

க.பொ.த (சா.த) பரீட்சை 1990 தொடர்பாக தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கலலூரிகளின் மாணவர்கள் தங்கள் தங்கள் பாடசாலை அதிபர்களை உடனடியாக அவர்களின் இல்லத்தில் சந்திக்கும்படி கேட்கப்பட்டிருக்கின்றார்கள்.

மேலே குறித்த அதிபர்களின் கொத்தணிகளான அம்பனை, தெல்லிப்பழை ஆகியவற்றின் பாடசாலை மாணவர்களும் தங்களின் அதிபர்களை உடனடியாகச் சந்திக்கும்படி கேட்கப்படுகின்றார்கள்.

## அம்பனை, தெல்லி. அதிபர் கூட்டம் வெள்ளி நிகழும்

அம்பனை, தெல்லிப்பழைக் கொத்தணி அதிபர்களின் கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மல்லாகம் மகாவித்தியாலயத்தில் காலை 10 00 மணிக்கு நடைபெறும். சகல அதிபர்களும் இக்கூட்டத்திற்குச் சமுகம் அளிக்கும்படி கேட்கப்படுகின்றனர்.

## நுண்கலைப்பீட பொதுக்கூட்டம்

யாழ் பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்தினைச் சார்ந்த மாணவர்களுக்கான பொதுக் கூட்டம் இன்று புதன்கிழமை காலை 9 30 மணிக்கு இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது இதில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் கலை, கலாசாரப் பிரிவுப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை உட்பட மேலும் பல மக்கள் முன்னணி உறுப்பினர்கள் கலந்து கொள்கின்றனர். (17)

## மண்டைதீவு தபாலக்த்தை இயக்க முயற்சி

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக கடந்த இரண்டு மாதங்களுக்குமேலாகசெயற்படாமல் இருந்த மண்டைதீவு உபதபாலகத்தை மீண்டும் வழமைபோல் இயங்கச் செய்வதற்கு யாழ் தபால் திணைக்கள உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கடந்த இரண்டு மாதகாலமாக மண்டைதீவு மக்கள் தமக்குரிய தபால்களை யாழ் பிரதம தபாலகத்திற் பெற்று வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

மண்டைதீவுக்குரிய தபாற்பொதிகள் தற்பொழுது வேலணை தபாலகத்துக்கு அனுப்பப் படுகின்றன. அங்கிருந்து மண்டைதீவு தபாலகத்திற்குரிய தபாற்பொதிகளை மண்டைதீவு தபாலகத்தினர் எடுத்துச் செல்கின்றனர். (33)

## கப்பல் வருகையில் தாமதம்

'விங்கோ றேடர்' உணவுக் கப்பல் கொழும்பில் இருந்து புறப்படுவதில் காலதாமத மேற்பட்டுள்ளது.

அதன் இயந்திரத்தில் ஏற்பட்டுள்ள கோளாறே இதற்குக் காரணம் எனச்சொல்லப்படுகிறது.

மக்கள் வங்கிக்குரியபணம் நிவாரண உணவுப் பொருட்கள், தபாற் பகுதிக்குரிய முத்திரைவகைகள் போன்ற பல அவசிய தேவைகளுக்குரிய பொருட்கள் இக் கப்பலில் கொண்டுவரப்படவிருக்கின்றன.

இக்கப்பல் பெரும்பாலும் இம்மாதம் 17-ம் திகதிக்குப் பின்னரே வடபகுதிக்கு வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகிறது. (66)

## கிராமிய உற்பத்திக்குழு

வட்டுக்கோட்டை கிழக்கு தாவளை கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டிடத்தில் வட்டுக்கிழக்கு கிராமிய உற்பத்திக்குழு அலுவலகம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டு இயங்கி வருகின்றது.

வட்டுக்கிழக்கு கிராமிய உற்பத்திக் குழுத் தலைவர் திரு. க. நித்தியரத்தினம் தலைமையில் இயங்கும் இக்குழுவினர் இப் பகுதியில் உள்ள சகலரும் வீட்டுத் தோட்டத்தில் ஈடுபடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (12)

## நாகபூஷணி அறங்காவலர் சபைத் தேர்தல்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலின் அறங்காவலர் தேர்தல் எதிர்வரும் 18-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் சி. நா. மதியாபரணம் தலைமையில் ஆலயத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (19)

## சாராயக் கடையில் திருட்டு

பூநகரி மட்டுவில் மேற்கில் உள்ள பிரபல சாராயக் கடையொன்றில் இருந்து ரூபா 11,000 பணமும் மூன்று போத்தல் சாராயமும் திருடப்பட்டுள்ளன.

கடந்த சனிக்கிழமை இரவு இக்கடைஉடைக்கப்பட்டு இத் திருட்டு நடைபெற்றுள்ளது.

---

தொடர் -- 11

# 'முற்றுப் பெறாத யுத்தத்தின் முதல் 107 நாள்கள்'

இந்த அறிவிப்பினாலும், மண்டைதீவு இராணுவ முகாமிலிருந்து கோட்டைக்குள் நுழைந்து விட்டோம் என்ற வீர உணர்ச்சியாலும் உந்தப்பட்ட சில இராணுவ வீரர்கள் கவசவாகனம் ஒன்றில் பிரதான வாயில் வழியாக வெளியேற ஆயத்தமாயினர்.''

இப்பரிதாபத்துக்குரியவர்களின் முடிவை விடுதலைப் புலிகளின் அதிகார ஏடு பின்வருமாறு விபரிக்கிறது:

### வெளியேற முயற்சி

''...நேரம் பி. ப 1.00 மணியைத் தாண்டி விட்டது. இந்த நிலையில்தான் கோட்டைக்குள்ளிருந்து ஒரு இராணுவக் கவச வண்டி வந்து கொண்டிருந்தது.

''மண்மூடைகள் அடுக்கப்பட்டு, உள்ளே சுமார் 10 இராணுவத்தினரை ஏற்றியபடி பொலிஸ் நிலையக் கட்டிடத்திற்குள், உடைக்


விமானமொன்று எமது காவல் அரண்களை அண்டிய யாழ் நகரின் மத்திய பகுதிகளில் ஒருவகை இரசாயனக் குண்டுகளை வீசத் தொடங்கியது.

''மாலை 5 30 மணிவரை 25 ற்கும் மேற்பட்ட இரசாயனக் குண்டுகளை நகர்மீது வீசித் தனது ஆத்திரத்தைத் தீர்த்துக்கொண்டது. தான் போக வழியில்லாத மூஞ்சூறு விளக்குமாற்றையும் காவிக்கொண்டு போனதைப் போல.

''கோட்டையை மீட்க வந்த இராணுவம் கோட்டைக்குள்ளே மாட்டிக் கொண்டு கோட்டை முகாமுக்குள் சிக்குண்டு கிடந்தவர்களுக்கு மேலும் பாரமாகியது.

### தொடர்ச்சியான தாக்குதல்

''அன்று தொடக்கம் இரவு, பகல் என்ற பேதமின்றித் தொடர்ச்சியாகக் கோட்டை




யாழ் கோட்டையின் பிரதான பகுதிகளை இப் படம் கோடிட்டுக் காட்டுகின்றது. கொத்தளங்கள், காவற் கோபுரங்கள், இராணுவம் தப்பியோடிய பாதை முதலானவை இங்கே குறிப்பிடப்பட்டுள்ளன. ஸ்ரீலங்கா குண்டுவீச்சு விமானம் விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட இடமும் துல்லியமாகப் படத்தில் காட்டப்பட்டுள்ளது.

---

கப்பட்ட கப்டன் ஆனந்தபாபுவின் காவலரணையும் தாண்டி உள்ளே சென்று நின்றது. அந்த வண்டியைக் காப்பரணாக்கிக் கொண்டு பல இராணுவத்தினரும் எமது நிலைகளுக்குள் வர முயன்றனர்.

''ஏறக்குறைய பொலிஸ் நிலையக் கட்டிடங்கள் அனைத்துமே உடைந்து விட்டன. எமது பிரதான காவல் அரண் ஒன்றும் சரிந்து

### 'அரவிந்தன்'

விட்டது. இனி இந்தக் கட்டிடங்களுக்குள் மனிதர்கள் இருக்க முடியாது எனக் கருதிக் கொண்டே இராணுவத்தினர் அந்த இறுதி முயற்சியை எடுத்தனர்.

''ஆனால் உடைந்த சிதைவுகளுக்குள்ளே இருந்து புலிகள் எழுந்தார்கள். இராணுவ வாகனத்தில் வந்தவர்கள் தாக்கத் தொடங்கு முன்னர் தாக்கப்பட்டனர். மிரண்ட இராணுவத்தினர் கோட்டைக்குள்ளே ஓட எத்தனித்தனர். விளையாட்டரங்கில் இருந்த புலி வீரர்களின் துப்பாக்கிகள் இயங்கித் தணிந்த போது பொலிஸ் நிலைய வாசலிலேயே 7 இராணுவத்தினர் சுருண்டு விழுந்தனர்.

''எஞ்சியவர்கள் காயங்களுடன் கோட்டைக்குள்ளே ஓடித்தப்பிவிட்டனர். எதிரியின் இறுதி முயற்சியும் முறியடிக்கப்பட்டு விட்டது. எதிரியின் மூக்குநுனியின் முன்னாலேயே அவனது சக பாடிகளின் சடலங்கள் கிடந்தன. ஆனால் அவனால் அதை எடுக்க முடியவில்லை.

''நேரம் மூன்று மணியையும் தாண்டிவிட்டது. சிறிது நேரத்தில் பறந்து வந்த அவ்ரோ

தாக்கப்பட்டது முதல் நாள் பகல் கோட்டை மதிலோரம் சென்று விட்ட சில படகுகளின் உதவியுடன் தண்டு வலித்து காயமடைந்த இராணுவத்தினர் இரவில் இருட்டின் உதவியுடன் மண்டைதீவுக்குத் தப்பி ஓடவும் முயன்றனர்.

### கடலிலும் தாக்குதல்

''இவர்கள் இடைநடுவில் பண்ணைக் கடலுக்குள் கடற்புலிகளினால் பலதடவைகள் தாக்கப்பட்டனர்.

''பாதுகாப்பான பகுதி'' என எதிரி கருதிய மண்டைதீவை நோக்கியிருந்த கோட்டையின் கடற்கரைப் பகுதிகளுககுள்ளும் தினமும் இரவில் இராணுவத்தினர் மீது தாக்குதல்களை நடாத்தினோம்.

''எதிரிகளை மலைக்கச் செய்யும்வகையில் தரையில் எவ்விதம் தாக்கப்பட்டார்களோ அதைப் போலவே கடலிலும் தாக்கப்பட்டார்கள். முன்னரே போட்ட திட்டத்தின் படி தனது படைவீரர்கள் யாழ் நகரத்தைக் கைபபற்றி விடுவார்கள் என்ற அதீத நம்பிக்கையில் சிறீலங்கா அரசியல் தலைவர்கள் கோட்டை கைப்பற்றப்பட்டதாக வெற்றிப் பிரகடனங்களைச் செய்தபடி இருக்க,

''இங்கே... மதில்மீது காவல் கடமைக்கு வரும் ஒவ்வொரு சிப்பாயும்புலிகளைக் காவல் காத்ததுடன் புலிகளின் அரண்களுக்கு அருகில் செத்துக்கிடந்த தனது சகபாடிகளின் அழுகிய உடல்களை எடுக்கத்திராணி அற்று பச்சாத்தாபத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

(வளரும்)

புதிய பிரதமர் சந்திரசேகரின் கவனத்துக்கு

# இலங்கை இனப்பிரச்சினை இந்திரா காங்கிரஸ் விபரிப்பு

**இலங்கைத் தமிழர் பிரச்சினையின் பக்கம் இந்தியாவின் புதிய பிரதமர் திரு. எஸ். சந்திரசேகரின் கவனம் இந்திராகாங்கிரஸால் இப்போது ஈர்க்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.**

இந்திரா காங்கிரஸின் பாராளுமன்றக்குழுத் தலைவர் திரு. இரா. அன்பரசு நேற்றுமுன்தினம் பிரதமர் திரு. சந்திரசேகரை நேரில் சென்று சந்தித்து இலங்கை இனப்பிரச்சினைபற்றி எடுத்துரைத்தார்.

அப்பாவித் தமிழர்கள் கொலை செய்யப்படுவது உடன் நிறுத்தப்படவேண்டும் என மத்திய அரசு இலங்கை அரசை வற்புறுத்தவேண்டும். இலங்கை - இந்திய ஒப்பந்தம் அமுல் செய்யப்படவேண்டும். தமிழர்க்கு உரிய முறையில் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படவேண்டும், பிரச்சினைக்குத் தீர்வுகாண போராளிகள் குழுக்களை புதுடில்லிக்கு அழைத்து பிரதமர் பேசவேண்டும். என்று திரு. அன்பரசு கேட்டுக்கொண்டார்.

பிரதமர் இவ்விடயங்களை கரிசனையுடன் செவிமடுத்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை சிறிய அயல் நாடுகளுக்கு எதிராக இந்தியா எந்தவிதமான அச்சுறுத்தல் நடவடிக்கையிலும் ஈடுபடமாட்டாது என நேற்று பிரதமர் சந்திரசேகர் ரைம்ஸ் ஒப் இந்தியாவுக்கு அளித்த பேட்டி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

# அரச ஊழியர்கள், ஓய்வூதியக்காரருக்கு இலவச நிவாரண உணவுப்பொருள் கிடைக்கும்

யாழ் மாவட்ட அரச ஊழியர்கள், ஓய்வூதியம் பெறுவோர் உட்பட 1500 ரூபாவுக்கு மேல் வருமானம் பெறும்அனைவருக்கும் இலவச உலர் உணவுப் பொருட்கள் கிடைக்கும். முதற்கட்டமாக ஒரு மாத காலத்திற்குரிய நிவாரணத்தை வழங்க அரசாங்கம் அனுமதியளித்துள்ளதாக கொழும்பிலிருந்து யாழ் அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிறட் யாழ் பதில் அரச அதிபர் திரு. கே. சண்முகநாதனுக்கு தெரிவித்தார். ஐந்தாவது கட்ட நிவாரணம் உணவு விநியோகத்தின்போது இவர்களுக்கும் இலவச உணவு விநியோகிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென பதில் அரச அதிபர் தெரிவித்தார்.

இதே வேளை விங்கோ றேடர், குமணா, லங்கா சிறி ஆகிய 3 உணவுக் கப்பல்கள் உணவுப் பொருட்களை ஏற்றிக்கொண்டு புறப்பட ஆயத்தமாக நிற்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (66)

## தெல்லிப்பழையில் ஹெலி தாக்குதல்

நேற்று நண்பகல் தெல்லிப்பழை மாவிட்டபுரம் பகுதிகளில் ஹெலிகப்டர் வட்டமிட்டுச் சரமாரியாகத்தாக்குதல் நடாத்தியது. (48)

## கிராமிய உற்பத்தி குழுக் கூட்டம்

கிராமிய உற்பத்திக் குழுக்களின் நல்லூர்ப் பிரதேச பொதுக் கூட்டம் கொக்குவில் இந்துக் கல்லூரியில் இன்று பிற்பகல் 2 மணியளவில் நடைபெறும் நல்லூர் பிரதேச கிராமிய உற்பத்திக் குழு உறுப்பினர் கிராமசேவையாளர் அனைவரும் சமுகமளிக்கும் படி தமிழீழ ஆய்வு நிறுவனம் கேட்டுள்ளது. (66)

# யாழ் மாநகர சுத்திகரிப்பு வேலை இன்று முதல் ஆரம்பிக்கப்படும்

இராணுவ நடவடிக்கையினால் சிதைவுற்றிருக்கும் யாழ் நகரின் சுத்திகரிப்பு வேலைகள் இன்றிலிருந்து ஆரம்பிக்கப்படும் என்று யாழ் மாநகரசபை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

விமானக் குண்டு வீச்சினால் மாநகரசபையின் பல வாகனங்கள் சேதமடைந்திருப்பதாலும், எரிபொருள் பற்றாக் குறைவாலும் இச் சுத்திகரிப்பு வேலைகள் படிப்படியாகவே விஸ்தரிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

செஞ்சிலுவைச் சங்கம் மூலம் டீசல் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபோதிலும் உடனடியாக இச் சுத்திகரிப்பு வேலை செய்ய வேண்டியிருப்பதால் பகிரங்கச் சந்தையில் டீசல் பெற வேண்டியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (70)

## அதிபர்களுக்கு விண்ணப்பப் படிவம்

திறமை, மூப்பு அடிப்படையில் அதிபர் சேவை தரம் 1,11 பதவிகளுக்கான பதவி உயர்வு விண்ணப்பப் படிவங்களைத் தமிழர் ஆசிரியர் சங்க நல்லூர்ப் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

இதற்கான பொதுவான விண்ணப்ப முடிவுத் திகதி கடந்த மாதம் 28-ம் திகதி என அறிவிக்கப்பட்டாலும் யாழ் கல்விப்பணிப்பாளரின் வேண்டுகோளின் பேரில் இம்மாதம் 20-ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (32)

14 - 01 - 1987 இல் இறைபதமடைந்த

அருட்திரு.

ஜீ. ரி. பாலசுந்தரம்

அடிகளின்

3-வது சிரார்த்த தினத்தில்

அன்னாருக்காக சகலரும் இறைஞ்சுவோமாக.

பலாலி தெற்கு. தகவல்: யோ. அருளானந்தம் 11075

காலமானார்

யோகநாதன் ரவீந்திரன்

(புகையிரதக்கடவைக் காப்பாளர்)

மட்டுவில் தெற்கு யோகநாதன் ரவீந்திரன் 12-11-90ல் காலமானார். இவர் யோகநாதன், காலஞ்சென்ற கமலாம்பிகை ஆகியோரின் அன்பு மகனும், தெய்வேந்திரன். யோகேந்திரன் கமலினி, யோகினி ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்றன. உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

''யோக பவனம்'' தகவல்; சி. யோகநாதன்
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. 11073

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மிபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 14-11-90 அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

## ஜே. வி. பி...

இந்த பௌத்த குரு பணிபுரிகிறார்.

ஆறு பேர் துப்பாக்கிகளுடன் விகாரையினுள் புகுந்து துப்பாக்கியால் சுட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (66)

## புலிகளைக்...

திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி, விடுதலைப் புலிகளின் நடமாட்டம் தமிழ் நாட்டில் அதிகமாக இருப்பதாகவும் இது குறித்து தமிழ்நாடு அரசும் கண்டும் காணாததைப்போல் நடப்பதாகவும் குறிப்பிட்டார்.

வி. பி. சிங்கின் மத்திய அரசை கவிழ்ப்பதைப் போன்றே, தமிழ்நாட்டிலும் தி. மு க. அரசைக் கவிழ்ப்பதையே தம் கட்சி நோக்கமாகக்கொண்டுள்ளதாக அவர் நேற்று தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் இருப்பதாக இந்திராகாங்கிரஸ் தலைவர் ராஜீவ் காந்தி தெரிவித்த கருத்துகளுக்கு முதலமைச்சர் மு. கருணாநிதி கடும் கண்டனம் தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

க. பொ. த. (சா. த) பரீட்சை விண்ணப்பம்

# காங்கேசன் கொத்தணி மாணவர்களின் கவனத்துக்கு

காங்கேசன்துறைக் கல்விக் கொத்தணியைச் சேர்ந்த பின்வரும் பாடசாலைகளில் கல்வி பயின்று க பொ. த. சாதாரணதரப் பரீட்சை 1990க்கு விண்ணப்பிக்கும் சகல பழைய - புதிய பாடத்திட்டத்தைப் பின்பற்றிய மாணவர்களும் இன்றும், நாளையும் யாழ் கல்வித் திணைக்களத்தில் தத்தமது வித்தியாலய அதிபர்களைச் சந்தித்துப் பரீட்சைக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாமெனக் காங்கேசன்துறைக் கொத்தணி அதிபர் தெரிவித்துள்ளார்.

பலாலி சித்தி விநாயகர் வித்தியாலயம் பலாலிவடக்கு அ. த. க. பாடசாலை, மயிலிட்டி வடக்கு கலைமகள் வித்தியாலயம், காங்கேசன்துறை மகாவித்தியாலயம் என்பவற்றைச் சேர்ந்த மாணவர்களே கல்வித்திணைக்களத்தில் தத்தமது அதிபர்களைச் சந்திக்க வேண்டும்.

நடேஸ்வராக்கல்லூரி மாணவர்கள் உடுவிலில் தற்காலிகமாக இயங்கும் கொத்தணி அலுவலகத்தில் கல்லூரி உப அதிபரிடம் தமது விபரங்களை ஒப்படைக்கலாம் எனவும் தெரிவித்தார். (32)

தவற விட்ட மாணவர்களுக்கு வேறு சந்தர்ப்பங்கள் வழங்கப்படமாட்டாதெனவும் அவர் தெரிவித்தார்.

## சயனைட் அருந்தி வீரமரணம்

நேற்று முன்தினம் மஞ்சத்தொடுவாய், கல்லடிப் பகுதிகளை ராணுவத்தினரும், தமிழ்க் குழுவொன்றும் சுற்றிவளைத்துத் தேடுதல் நடாத்தியபோது நியான் (மகிழந்தீவு) புடியான் (மகிழந்தீவு) ஆகிய இரு போராளிகள் சயனைட் அருந்தி வீரமரணமடைந்தனர்.

மோதல் சம்பவம் ஒன்றில் காயமடைந்த போராளி கதிர் (மு. ஐங்கரன் சித்தன் கேணி) நேற்று வீரமரணமடைந்தார்.

## மணலாறில்...

காயமடைந்து ஓடிவிட்டனர்' இவர்கள் பயணம் செய்த 'லான்ட்குரூஸர்' வாகனமும் சேதமாக்கப்பட்டது. தப்பியோடிய சிப்பாய்களிடம் இருந்து ரி 81 மகஸீன்-3, ஏ. கே. கோல்ஸர்-1, ஐ எம். ரவை-100, ஹெல்மட்-1, ஜே ஆர். குண்டு.2 என்பனவும் மீட்கப்பட்டன.

## வயாவிளான்...

ளில் உள்ள வீடுகளே அதிகளவில் இவ்வாறு பாதிப்படைந்துளளது.

இத்துடன் வடமூலைப் பகுதிகளில் தற்போதும் பல வீடுகள் குண்டு வைத்துத் தகர்க்கப்படுவதாகவும் உத்தரியமாதா கோயிலுக்குத் தெற்கே வடமூலை மனற்பிட்டிப்ப குதிக்கிடையில் உள்ள பல வீடுகளே தகர்க்கப்படுகின்றதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாகாணசபைகள்..

என்றார். சுதந்திரக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, மாகாண சபையின் குறை நிரப்புமதிப்பீட்டுக்கு எதிராக வாக்களித்தன. தமிழர் விடுதலைக்கூட்டணி, முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய சோஷலிச முன்னணி எம்.பிக்கள் வாக்களிப்பின்போது சபையில் இருக்கவில்லை.

## ஆயுதப்படை—

சட்டத்தின் முன் எல்லாக் குடி மக்களும் சமம் என்பதை உள்ளடக்கத்தக்கதாக யாப்பின் 12வது பிரிவு திருத்தப்படவுள்ளது.

13 (1) இற்கு கொண்டுவரப்படவுள்ள திருத்தத்தினால் கைது செய்யப்படும் நபர்கள் ஒரு சட்டத்தரணி முன்னிலையில் பொலிஸாருக்கு வாக்கு மூலம் அளிக்கவும் அவ்வாக்கு மூலம் நீதிமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்படவும் வகை செய்கிறது.

இதனால் நிர்ப்பந்தத்தின் பேரில் பெறப்பட்டது என்ற குற்றச்சாட்டுக்கு இடமில்லாதுபோகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒருவருடைய அடிப்படை உரிமைகள் நிர்வாக அல்லது நிறைவேற்றுச் செயற்பாட்டினால் பறிக்கப்படுமிடத்து அதனால் பாதிக்கப்பட்டவர் பரிகாரம் கோருவதற்கு 17-ம் பிரிவு உரிமையளிக்கிறது.

ஆனால் உத்தேசத்திருத்தம் பாதிக்கப்பட்டவர் மட்டுமன்றி உயர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்க அருகதையுள்ள குழுவின் சார்பிலும் அல்லது வேறு எவர்சார்பிலும் பொது நன்மை கருதிய மனுக்கள் செய்யப்பட இடமளிக்கிறது.

ஐரோப்பிய பொருளாதார சமூகம், உலகவங்கி ஆகிய அமைப்புகள் அண்மைக்காலங்களில் ஸ்ரீலங்கா அரசுக்கு ஏற்படுத்திய நிர்ப்பந்தங்கள் காரணமாக இந்த திருத்தச் சட்டம்கொண்டுவரப்படுவதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். (66)

## மன்னாரில்...

ளது. நேற்றுப் பலாலிப் பகுதியில் நடைபெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் இராணுவ உயர் அதிகாரி ஒருவர் காயமடைந்ததாகப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

## சிவில்

கொல்லப்பட்டார். மற்றையவர் படுகாயமடைந்தார். இறந்த சிப்பாயின் சடலத்தை மீட்க முகாமில் இருந்து வந்த ராணுவத்தினர் பொது மகன் ஒருவரை வீதியில் வைத்துக் கத்தியால் குத்திக் காயப்படுத்தினர்.

கண்ணீர் அஞ்சலி

பொன்னுத்துரை கந்தசாமி

மண்ணுலகில் 16-11 1951 — விண்ணுலகில் 9-11-1990

முல்லை இளைஞர் மன்றத்தை அமைப்பதில் முன்னின்று உழைத்தவரும், முன்னாள் வென்னப்புவ பிரபல வர்த்தகரும், கனடாவில் தற்போது தொழில் பார்த்து வந்தவரும், எமது மன்ற உறுப்பினருமான திரு. பொன்னுத்துரை கந்தசாமியின் எதிர்பாராத மறைவையொட்டி முல்லை இளைஞர் மன்றத்தினர் ஆழ்ந்த அனுதாபத்தை இவரது உற்றார் உறவினருக்கு தெரிவிக்கின்றனர்.

முல்லைப் பிலவு, முல்லை இளைஞர் மன்றம்,
காரைநகர். 11074